2. தகவல் கோரல்.

(அ) சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய வரலாற்றுச் சிறப்பு உடைய சென்னை உயர் நீதி மன்றத்தில் நேற்றைய தினம் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். காலியாக இருக்கின்ற 6 நீதிபதிகள் பதவிகளை நிரப்ப ஒரு குறிப்பிட்ட வகுப்பினரையே நியமனம் செய்ய....(மணியடிக்கப் பெற்றது).

(ஆ) செங்கற்பட்டு மாவட்டத்தில் பூச்சிகளால் பயிர்கள் பாதிப்பு.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் மழை இல்லாததால் 8 தாலுக்காக்களுக்கு மேல் வறட்சி பெரும் பகுதி உச்சக் கட்டத்தை அடைந்து இருக்கிறது. குறிப்பாக பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் தாலுக்காவில் பம்புசெட் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கின்ற பயிர்களை எல்லாம் இன்றைக்குக் கதிர் வரும்போது கழுத்தை வெட்டுகின்ற குருத்துப் பூச்சிகள் பயிரை அழித்துக் கொண்டு இருக்கின்றன. அரசு தலையிட்டு அதை......

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குருத்து பூச்சி வந்து இருப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாய இலாகா மூலமாக அந்தப் பூச்சிகளை அழித்து பயிர் பாதுகாப்பு செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) ஆழ்வார் திருநகரி பகுதியில் பெட்ரோல் ஊற்று இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவை சபாநாயகர் அவர்களே, ஆழ்வார்திருநகரி யூனியனில் ராஜகிரி பஞ்சாயத்திலே திருவிலையா வட்டம் என்ற இடத்திலே பெட்ரோல் ஊற்று இருப்பதாக இப்போது செய்திகள் வந்து இருக்கின்றனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பார்வையிட்டு எங்களுக்கு வரும் திங்கட்கிழமையாவது அதைப் பற்றிய தகவலை......

1986 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்வார் திருநகரில் பெட்ரோல் ஊற்று கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் அதுபற்றிய தகவல் மத்தியப் பேரரசுக்குத்தான் தெரியும், அவர்களிடமிருந்து தகவல் பெற்று சபைக்கு அறிவிக்க முயற்சிக்கிறேன். (குறுக்கீடு.)

(ஈ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படுவது.

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் என்னுடைய தொகுதியில் உள்ள கொருக்குப்பேட்டை பாரதி நகரில் தீ பற்றி எரிந்து அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டு உடனடியாக நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நேற்றைய தினம் பட்டா கொடுக்கும் போது சட்டமன்ற உறுப்பினராகிய நான் காலை முதல் மாலை வரை இங்கேயே இருந்தேன், எந்தவித தகவலும் எனக்குத் தெரிவிக்காமல் மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்களும், திரு. அங்கமுத்து அவர்களும் அங்கே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வாருங்கள். அது என்னுடைய வேலை இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்களுக்காக நான் தீர்த்து வைக்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால்: பட்டா கொடுத்து முடிந்து ஆகிவிட்டது. நாங்கள் * * மிகவும் விசுவாசமாக இருந்தும் பட்டா கொடுக்கும்போது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வாருங்கள். நான் தீர்த்து வைக்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. எஸ். வேணுகோபால்: இதுமுறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் நான் ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை. நான் என்ன சொல்ல முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.